பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 130

13.11.2026

லஞ்சம் கேட்டு பெற்ற டாஸ்மாக் மேற்பார்வையாளர் கைது

புகார்தாரர் திரு.மணி, விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் உள்ள டாஸ்மாக் மதுபானக்கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறார். புகார்தாரரின் சம்பளத்திற்கான வருகைப் பதிவேட்டினைச் சரி செய்து அனுப்புவதற்காக திரு.அமல்ராஜ், மேற்பார்வையாளர், சிவகாசி டாஸ்மாக், விருதுநகர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.6,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விருதுநகர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 13.11.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அமல்ராஜ், மேற்பார்வையாளர் ரூ.6,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

PRESS RELEASE – 130
13.11.2026

TASMAC SUPERVISOR ARRESTED FOR BRIBE

The complainant, Tr.Mani, residing at Virudhunagar District, is working as a Salesman at a TASMAC Shop in Sivakasi, Virudhunagar district. Tr.Amalraj, Supervisor, TASMAC, Sivakasi, Virudhunagar District, demanded a bribe of Rs.6,000 from the complainant for processing his attendance register for salary purposes. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Virudhunagar detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (13.11.2026). During trap proceedings, Tr.Amalraj, Supervisor demanded and accepted the bribe amount of Rs.6,000/- from the complainant. The accused was arrested and sent for remand.